RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22268

OPEN ACCESS

# சிலம்பில் சமயம்

**நா. சிவகுரு** [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்-632115, தமிழ்நாடு, இந்தியா

# Religion in Silapathikaram

**N. Sivaguru** [a, *]

[a] Department of Tamil, Thiruvalluvar University, Vellore-632115, Tamil Nadu, India

* Corresponding Author: arasi162010@gmail.com

Received: 09-09-2022
Revised: 01-11-2022
Accepted: 12-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Silapathikaram is considered to be the foremost of Tamil manuscripts. It is also titled as Muthamilkappiyam, Nadagakkapiyam and Moovendarkapiyam. The life style of the people of that time, their knowledge of music, their lifestyle, notes on Kanikaiyar clan, notes on other religions, lack of religious education, news about sadukka botham are highlighted in this book and explained in three cantos. Even though Silapathikaram was composed by Ilangovadigal, there are references about other religions too. Religion is a very broad concept. Having faith alone is not religion. Special practices for religion, influence of external religious development, etc. should also be considered. Ilangovadigal who composed Silapathikaram was a Jain but he also mentioned about other religions in it. The purpose of this article is to exemplify the messages that he mentioned in Silapathikaram. In this article, you can find news about Shiva, news about Murugan, notes about Tirumal, news about varunabhutam, kannagi kottam in Silapathikaram.

**Keywords:** Silapathikaram, Sangam Literature, Kannagi Kottam, Ilangovadigal

## முன்னுரை

தமிழ்க் காப்பியங்களில் முதன்மையானதாகக் கருதப்படுவது சிலப்பதிகாரம். இதனை முத்தமிழ்க்காப்பியம், நாடகக் காப்பியம், மூவேந்தர்களுக்கும் உரிய காப்பியம் என்று வழங்கி வருகின்றனர்.மூன்று காண்டங்களாக அமைந்துள்ள இக்காப்பியத்தில் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் இசை பற்றிய அறிவு, அவர்களின் வாழ்க்கை முறை, கணிகையர் குலம் பற்றிய குறிப்புகள், பிற சமயங்கள் பற்றிய குறிப்புகள், சமயக்காழ்ப்புணர்ச்சி அற்ற நிலை, சதுக்க பூதம் பற்றியச்செய்திகள் ஆகியன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் இளங்கோஅடிகளால் இயற்றப்பட்டாலும் அதில் பிற சமயங்களைப்பற்றி குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. சமயம் என்பது மிக விரிந்த பொருடையது. அதில் நம்பிக்கையை மட்டும் சமயம் என்று குறிப்பிடுவது இல்லை. சமயத்திற்கு என்று தனி நடைமுறைகள், புறச்சூழல், சமய வளர்ச்சியின் தாக்கம், ஆகியனவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். சிலப்பதிகாரத்தினை இயற்றிய இளங்கோவடிகள் சமணசமயத்தவர் ஆனாலும் அதில் பிற சமயங்களைப் பற்றியச் செய்திகளை எடுத்துரைத்துள்ளார். அவ்வாறு அவர் எடுத்துரைத்த செய்திகளை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். சிலப்பதிகாரத்தில் காணலாகும் சிவன் பற்றியச் செய்திகள், முருகன் பற்றியச்செய்திகள், திருமால் பற்றி குறிப்புகள், வருணபூதங்கள் பற்றியச் செய்திகள், கண்ணகி கோட்டம் ஆகியன பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

பல சமயங்களும் ஊக்கத்தோடு இயங்கிக் கொண்டு செயல்பட்டுக்கொண்டு இருந்த காலத்தில் உருவானது தான் சிலப்பதிகாரம். அதற்குச் சான்றாக அக்காலத்தில் இருந்த பிற சமயங்களின் கோயில்கள் பற்றியக் குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுவதே ஆகும். அவ்வாறு காணலாகும் செய்திகளைத் தொகுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சிவன் கோயில்

சிவன் வழிபாடு அக்காலச்சமூகத்தில் இருந்தா என்பது தெரியவில்லை ஆனால் பிறப்பு இறப்பு அற்ற தெய்வமாக ஒரு தெய்வம் பற்றியக் குறிப்பு சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. அது பிற்காலத்தில் சிவன் வழிபாடாக மாறி இருக்கலாம்.

இதனை,

“பிறவா யாக்கைப்பெரியோன் கோயிலும்”

என்பதால் அறியலாம் (Somasundharanar, 1969). இதில் பிறவா யாக்கை பெரியோன் என்பது தாயின் வயிற்றில் பிறக்காதவன் என்றுபொருள். பிற்காலத்தில் இத்தன்மை சிவனுக்கு வழங்கப்பட்டுள்ளதை அறியலாம். இதில் “பெரியோன் என்பதற்கு மகாதேவன்”[1] என்று அரும்பதவுரையாசிரியர் உரை எழுதுவார். மேலும் இதற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் “பிறவாதயாக்கையை உடைய இறைவன் என விளக்கி, இனி யாக்கையிற் பிறவாப் பெரியோன் எனினும் அமையும் என்றது அருபி என்றபடி ”[2] என்றார். சிவன் தன் நெற்றியில் கண்உடையவன்.

இதனை

“நுதல்வழி நாட்டத்து இறையோன் கோயிலும்”

என்பதால் அறியலாம் (Somasundharanar, 1969).

## முருகன் கோயில்

முருகன் வழிபாடு பழங்காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. இதனை சங்க இலக்கியங்கள், இலக்கணங்கள் நமக்கு உணர்த்துகின்றன. சிலப்பதிகாரத்தில் முருகனைப் பற்றியக் குறிப்புகள் உள்ளன. முருகனுக்கு ஆறு முகம் இருந்தது என்றும் செவ்வேள் என்றும் வழங்கப்பட்டு இருந்த செய்தியை சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இதனை

“அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்”

என்பதால் அறியலாம் (Somasundharanar, 1969).

இதனைப் போன்று குன்றக்குரவையில் முருகன் நீலப்பறவை மீது தன் மனைவியோடு

அமர்ந்து இருப்பதும் அவன் ஆலமர் செல்வனின் மகன் என்றும் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகின்றது.

இதனை,

“நீலப்பறவைமேல் நேரிழைதன்னோடும்

ஆலமர் செல்வன் புதல்வன் வரும்”

என்பதால் அறியலாம் (Arunachalam, 1971).

## திருமால் கோயில்

திருமால் வழிபாடு பழங்காலம் தொட்டு நம்மிடம் வழங்கி வந்துள்ளது. இதனைச் சிலப்பதிகாரம் நமக்கு உறுதி செய்கின்றது. திருமால் அப்பெயரில் வழிபடாமல் வேறு பெயர்களில் வழிபட்டு வந்துள்ளதைக் காணமுடிகின்றது. திருமாலை நீல மேனி உடையவன் என்றும் உவணச்சேவல் உயர்ந்தோன் என்றும் ஆடகமாடம் அமர்ந்தோன் என்றும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

இதனை,

"நீல மேனி நெடியோன் கோயிலும்"

என்பதாலும்

"உவணச்சேவல் உயர்ந்தோன் நியமமும்"

என்பதாலும் அறியலாம் (Manikkavasagar, 1998).

மேலும் ஆயிரம் தலையினை உடைய ஆதிசேடனைப் பாயாகக் கொண்டு திருமகள் தங்கும் மார்பை உடையவன் திருமால் என்று இளங்கோவடிகள் விளக்குகின்றார்.

இதனை

"ஆயிரம் விரித்துஎழு தலையஉடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழுது ஏத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

என்பதால் அறியலாம் (Manikkavasagar, 1998).

மேலும் திருமால் ஒரு கையில் சங்கும் ஒருகையில் சக்கரமும் ஏந்தியவன் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

இதனை,

"பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி"

என்பதால் அறியலாம் (Manikkavasagar, 1998).

## கொற்றவை கோயில்

சங்க இலக்கியம் போன்று இதிலும் கொற்றவை வழிபாடு குறிப்பிடப்படுகின்றது. இதில் வெட்சி வீரர்களுக்கு வெற்றி பெற்றுத்தரும் தெய்வம் என்று குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள். இதனை ஐயை கோட்டம் என்று கூறிச்செல்கின்றார்.

இதனை

"கூற்றுறழ் முன்பொடு கொடுவில் ஏந்தி
வேற்றுப்புலம் போகி நல்வெற்றங் கொடுத்துக்
கழிபேர் ஆண்மைக் கடன் பார்த்து இருக்கும்
விழிநுதற்குமரி விண்ணோர் பார்வை
மையறு சிறப்பின் வான நாடி

ஐயை தன் கோட்டம் அடைந்தனர்"

என்ற வழி உணரலாம் (Manikkavasagar, 1998).

கொற்றைவை தெய்வத்தைக் குறிப்பிடும் பொழுது அவ்வடிவங்கள் சிவனையும் திருமாலையும் நினைவு படுத்தும் விதமாக அமைந்துள்ளன. இதனை வேட்டுவ வரி 22-35 வரை உள்ள பாடல் அடிகள் விளக்குகின்றன. கொற்றவையின் தோற்றம் பற்றி விளக்கமாக இப்பகுதி விளக்கிச்செல்கின்றது.

## வருண பூதங்கள்

ஒவ்வொரு வருணத்திற்கும் பூதங்கள் அன்று இருந்த நிலையினைக் காண முடிகின்றது. நால்வகை வருணத்திற்கும் நான்கு பூதங்கள் இருந்தமையைச் சிலப்பதிகாரம் விரிவாக எடுத்துக்கூறுகின்றது.அந்தணர் பூதம், அரசர் பூதம், வணிக பூதம், வேளாண் பூதம் பற்றி விரிவாக இளங்கோவடிகள் எடுத்துக் கூறுகின்றார்.

இப்பூதங்கள் அந்த அந்த வருணத்திற்கான கருவிகளைக் கையில் கொண்டு இருக்கின்றன. பார்பனப்பூதம் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

"நித்திலப் பைம்பூண் நிலாத்திகழ் அவிர்ஒளி

தண்கதிர் மதியத் தன்ன மேனியன்

முத்தீ வாழ்க்கை முறைமையின் வழாஅ

வேதமுதல்வன் வேள்விக் கருவியொடு

ஆதிப்பூதத்து அதிபதிக் கடவுளும்"

என்றும் அரச பூதம் பற்றிக் குறிப்பிடும் பொழுது

ஆழ்கடல் ஞாலம் ஆள்வோன் தன்னின்

முரைசொடு வெண்குடை கவரி நெடுங்கொடி

உரைசால் அங்குசம் வடிவேல் வடிகயிறு

எனவிவை பிடித்த கையினன் ஆகி

அரைச பூதத்து அருந்திறல் கடவுளும்

என்றும் வாணிகப் பூதம் பற்றிக்குறிப்பிடும் பொழுது

செந்நிறப் பசும்பொன் புரையும் மேனியன்

மன்னிய சிறப்பின் மறவேன் மன்னவர்

கிழவன் என்போன் கிளர்ஒளிச் சென்னியின்

இளம்பிறைசூடிய இறையவன் வடிவின் ஓர்

விளங்கொளிப்பூத வியன்பெரும் கடவுளும்

என்றும் வேளாண்பூதம் பற்றிக் குறிப்பிடும் பொழுது

கருவிளை புரையும் மேனியன் அரியொடு

வெள்ளி புனைந்த பூணினன் தெள்ளொளிக்

காழகம் செறிந்த உடையினன் ....

ஆடற்கு அமைந்த அவற்றொடு பொருந்திப்

பாடற்கு அமைந்த பலதுறை போகிக்

கலிகெழு கூடற் பலபெறு பூதத்

தலைவன் என்போன் தானும் தோன்றி"

நால்வகை வருணத்தினர்களுக்கும் இவ்வாறு பூதங்கள் இருந்தனவா என்று தெரியவில்லை. ஆனாலும் இளங்கோவடிகள் குறிப்பிட்டளதன் அடிப்படையில் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

## முடிவுரை

சிலப்பதிகாரம் சமணர் ஆகிய இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது என்று கூறபட்டு வந்துள்ளது.அதில் சமண சமயக்கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ள போதும் பிற சமயக்கருத்துக்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. சிலப்பதிகாரம் எழுந்த சூழலில் சிவ வழிபாடு இருந்ததா என்பது தெரியாது. பிற்காலத்தில் சிவனுக்குத் தெரிவிக்கப்பட்டவைகள் அனைத்தும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. திருமால் நீலமேனி நெடியோன் என்றும் உவணச்சேவல் நெடியோன் என்றும் குறிப்பிடப்படுகின்றான். முருகன் வழிபாடு சிலம்பில் அதிகம் காணப்படுகின்றது. முருகனை ஆலமர் செல்வனின் மகன் என்று சிலம்பு குறிப்பிடுகின்றது. இந்த ஆலமர் செல்வன் பின்னாளில் சிவனாக வளர்ந்துள்ளான். கொற்றவை வழிபாடு அதிகம் காணப்பட்டுள்ளதை இங்கு காணமுடிகின்றது. போருக்கான தெய்வமாக கொற்றவை விளங்கி உள்ளாள். போருக்கு செல்லும் முன்பும் பின்பும் அவளை வழிபடும் பண்பு இருந்துள்ளதைக் காணமுடிகின்றது. ஒவ்வொரு வருணத்திற்கும் ஒரு பூதம் இருந்ததை இளங்கோவடிகள் பதிவு செய்கின்றார். இதன் மூலம் அக்கால சமூகத்தில் வருணம் என்பது மிக முக்கிய இடத்தைப் பெற்று இருந்த நிலையைக் காண முடிகின்றது. சிவன், திருமால் என்ற பெயர்களில் குறிப்பிடாமல் வேறு பெயர்கள் பயன் படுத்தப்பட்டு பின்னாளில் இது சிவன் பெயர், இது திருமால் பெயர் என்று பிரித்துக்காட்டி சமூகத்தில் பதிவு செய்து இருக்கலாம். சமண, பௌத்த சமயத்தினரின் பயன் படுத்திய சொற்கள், பெயர்கள், ஆகியன பின்னாளில் சிவன், திருமால் பெயர்களைக்குறிக்கப்பின்னாளில் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம்.

## References

Arunachalam, M. (1971) Silappathigaram Sinthanai, Madurai Kamaraj University, Madurai, India.

Manikkavasagar, N. (1998) Silappathikkaram, 2nd Edition, Uma Pathippagam, Chennai, India.

Somasundharanar, U.V. (1969) Silappathigaram, Thirunelveli Saiva Siththantha Noorpathippuk Kalagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License